**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. C.C. No. 117/2025**

**Deposition of Witness for Petitioner PW7 (LW8)**

| | | |
|---|---|---|
| **Name** | : | வினோத் |
| **Father's Name** | : | ராமகிருஷ்ணன் |
| **Village** | : | தவிட்டுமேடு |
| **Taluk** | : | கோத்தகிரி |
| **Calling** | : | கூலி வேலை |
| **Age** | : | 28 |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**21.07.2026** **Witness Signature :**

**எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 11.50 A.M**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியை எனக்குத் தெரியும். நாங்கள் அனைவரும் ஒரே பகுதியில் குடியிருந்து வருகிறோம். கடந்த 7 மாதங்களுக்கு முன் ஒரு நாள் இரவு சுமார் 09.00 மணியளவில் என் வேலையை முடித்துவிட்டு என் வீட்டிற்கு வந்தபோது, எதிரிக்கும் ஹரிஷ் என்பவருக்கும் அடிதடி பிரச்சனை நடந்ததாக சொன்னார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அதை பிரச்சனை நடந்த அன்று

இரவு 09.00 மணியளவில் போலிசார் என்னை விசாரித்ததற்காக வாங்கினார்கள். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு அனுமதியின்பேரில் குறுக்கு விசாரணை:**

1. கடந்த 27.05.2025 ம் தேதியன்று காலை சுமார் 09.35 மணியளவில் நானும் எனது அம்மா புஷ்பராணியும் வேலைக்கு செல்வதற்காக அரவேனு பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது போலிசார் ஆஜர் எதிரியை கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அதன்பின்னர் காலை சுமார் 10.30 மணியளவில் எதிரி அவரது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் படுத்திய மர கைப்பிடியுடன் கூடிய வெட்டுக் கத்தி ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், அதற்கு நானும், எனது அம்மா புஷ்பராணியும் சாட்சியாக கையொப்பம் இட்டதாகவும், போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 21.07.2026**
**Judicial Magistrate,**
**Kotagiri**